# பரலோகம் / மோட்சம்

- பிதாவினுடைய வீடு (யோவான் 14:2)
- தேவனாகிய கர்த்தருடைய இல்லம் (மத் 6:9)
- தேவனுடைய சிங்காசனம் மூன்றாம் வானம் (1 கொரி 12:2)

**<u>பரலோகம்</u>**

**ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்ட ஓர் இடம்**

**யோவா 14:2,3, வெளி 5:9, 1 யோவ 3:2**

இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்ட இடம் பூமியிலிருந்து வடதிசையில் நட்சத்திரங்களுக்கு மேலாக உள்ளது. ஏசா 14:13, சங் 48:2. யோபு 26:7 (உத்திரம் = வடக்கு)

**<u>பரலோகில்</u>**

1) நகரம் உண்டு எபி 11:10, 16 யோவ 14:2
2) கூடாரம் உண்டு எபி 8:2
3) மரங்கள், ஆகாரம் உண்டு வெளி 2:7,17
4) இசைக்கருவிகள் உண்டு வெளி 5:8
5) பொற்பீடம், பொற்கலசம், தூபவர்க்கம், நெருப்பு, குறடு உண்டு வெளி 8:3, ஏசா 6:1–7
6) புத்தகங்கள் உண்டு (லூக் 10:20, வெளி 5:1, 13:8

   ஜீவபுஸ்தகம் லூக் 10:20,வெளி20:15,13:8



இரட்சிப்பு

| | |
|---|---|
| **முதலாம் வானம்**<br>**(Aerial Heaven)** | மேக மண்டலம் அப் 1:11 (பூமியிலிருந்து 0–1000 கி.மீ.)<br>இது ஆகாய விரிவு ஆதி 1:8,9 மத் 24:30<br>நம் கண்களுக்கு தெரியும் ஆகாயம், மேகங்கள், மழை, பனி, காற்று, புயல், மின்னல், பறவைகள், விமானங்களும் பறக்கின்றன. |
| **இரண்டாம் வானம்**<br>**(Celestial Heaven)** | **(98% விண்மீன்கள், 2% உடுமண்டல வளிமமும், தூசியும்)**<br>அண்டவெளி / விண்வெளி (Outer Space)<br>சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அடங்கிய பேரண்டமாகிய வானம்<br>ஆதி 1:14–18, 22:17, உபா 4:19, ஏசா 13:10, மத் 24:29, 2 பேது 3:10–12, யோவே 2:10<br>(எபே 6:12 – ஆகாய மண்டலத்தில் சாத்தான் பிசாசு) |
| **மூன்றாம் வானம்**<br>**(Heaven)** | பரலோகம் 2 கொரி 12:2<br>நட்சத்திரங்களுக்கு மேலாக பூமியின் வடதிசையில் உள்ளது.<br>1 ராஜா 8:30, யோபு 14:3, சங் 11:4, மத் 6:9, 8:10, யோவ 14:3, எபி 9:24, ஏசா 14:13, சங் 48:2,1 பேது 1:4 |



## விசுவாசிகள் பரலோகத்தில் எப்படி இருப்பார்கள்

- பூமிக்குரிய குடும்ப உறவு முறைகள், பாலின வேறுபாடுகள் இல்லாமல் தேவதுதர்களைப் போல இருப்போம். நாம் தேவனுடைய குமாரரும், ஊழியக்காரருமாக இருப்போம். மத் 22:30

- பூமியில் நாம் ஒருவரையொருவர் அறிந்திருக்கிறபடியே பரலோகிலும் ஒருவரையொருவர் அறிந்திருப்போம். வேதாகம நபர்களையும் அறிந்திருப்போம் மத் 17:4, மாற் 9:5, லூக் 9:33, மத் 8:11 (ஆபிரகாம், மோசே, யாக்கோபு, தாவீது, எலியா….) 1 கொரி 13:12

- பரலோகில் பூமியில் வழங்கப்பட்ட பெயரே வழங்கப்படும் லூக் 10:20, பிலி 4:3, மத் 17:3, நமது பெயரையும் நம் தனித்தன்மையையும் உடையவர்களாயிருப்போம்.

- பரலோகில் நமக்கு இரத்தமில்லாத மாம்சமும் எலும்பும் உடைய காணக்கூடிய அழியாத கறைபடியாத நித்தியமான மகிமையின் சரீரம் உண்டு. லூக் 24:39,40, பிலி 3:21, 1 கொரி 15:41–54

- தேவனுடைய முகத்தை காண்பார்கள் – வெளி 22:4

- கர்த்தரோடு இருப்பார்கள் 2 கொரி 5:8

- எப்பொழுதும் ஸ்தோத்திர துதிகளுடன் கூடிய சங்கீதங்கள் புதிய பாடல்கள் பாடுவார்கள். வெளி 7:10, 5:9,10, 22:4, 21:11, சங் 16:11

- தேவனுக்கு பணி செய்வார். சுறுசுறுப்பும் பொறுப்பும் உள்ள ஒரு வாழ்க்கை வாழ்வோம். வெளி 22:4 (இந்த உலகத்தில் நம் பொறுப்புகளை எவ்வாறு நிறைவேற்றினோம் என்பதன் அடிப்படையில் பரலோகில் நமக்கு பொறுப்புகள் கொடுக்கப்படும்) லூக் 19:11–26, 16:9–14, மத் 24:45–47

- பூரண அறிவுள்ளவர்களாக இம்மைக்குரிய மறுமைக்குரிய எல்லா கேள்விகளக்கும் பதிலை பெற்றவர்களாக இருப்போம். 1 கொரி 13:12

இரட்சிப்பு நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

(தேவன், இயேசு கிறிஸ்து, பதினாயிரமான தேவதூதர்கள், மூப்பர்கள், முற்பிதாக்கள், நீதிமான்கள், பரிசுத்தவான்கள், சீயோன் மலை, பரம எருசலேம், சர்வ சங்கமாகிய சபை, இயேசு கிறிஸ்துவின் இரத்தம், ஜீவநதி, ஜீவவிருட்சம் ஆகியவற்றோடு நாம் ஐக்கியம் கொள்வோம்)

**பரலோகம் செல்லும் வழி வாசல் இயேசுகிறிஸ்து யோவ 14:6, 10:9**

**பரலோகில்**

- பொக்கிஷத்தை சேர்க்கலாம் மத் 6:20, லூக் 12:33, மாற் 10:21
- நமது கிரியைகளை எடுத்து செல்லலாம். வெளி 22:12, 2 கொரி 5:10
- நம்மை ஏற்று கொள்வாருண்டாக செய்யலாம். லூக் 16:9
- தேவனே அஸ்திபாரமிட்டு கட்டுகிறார். எபி 11:10,16, 2 கொரி 5:1.

வேதாகமம்
இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

**பரலோகம்**

1) பரதீசு
2) பிதாவின் வீடு
3) புதிய எருசலேம் (அ) சீயோன்

**1) பரதீசு**

பரலோகில் சரீரமற்ற ஆசீர்வாதமான நிலை (சரீர உயிர்த்தெழுதலுக்கும் மகிமையடைதலுக்கும் காத்திருக்கிறவர்கள்)

தேவ சமுகத்தால் நிறைந்த இடம் தேவனுடைய தோட்டம் – ஜீவவிருட்சம் புசித்து நித்திய நித்திய காலமாய் தேவனோடு ஐக்கியம் கொள்ளும் இடம். 2 கொரி 12:2, 3

பரதீசு முதலாவது — ஏதேன் தோட்டத்தில்

வீழ்ச்சிக்குப் பின்

பூமிக்குஅடியில் — மத் 27:52, 53 12:40

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்

பரலோகில் பரதீசு — 2 கொரி 12:1–4, எபே 4:8–10

ஜெயங்கொள்ளுகிறவர்கள் சேரும் இடம் வெளி 2:7

(நமக்குள்ளிருக்கும் கிறிஸ்துவின் ஜீவனால் இந்த உலகையும் மாம்சத்தையும் பிசாசையும் நாம் ஜெயங் கொள்ள வேண்டும். 1 பேது 4:11–16)

2) பிதாவின் வீடு

- நாம் சேவித்த பரமபிதா பரலோகில் நமக்கு பிதாவாக இருப்பார் யோவ 14:2, தானி 7:9
- பூமியில் நம்மை மீட்ட இரட்சகர் இயேசு தான் அங்கும் நமக்கு ஆண்டவராய் இருப்பார். மத் 6:9 வெளி 6,7:17
- பூமியில் நம்மை வழி நடத்திய பரிசுத்த ஆவியானவரே அங்கும் ஜீவநதியாக பரலோகத்தை நிரப்பியிருப்பார். யோவா 14:3, வெளி 14:13, 22:17, 1 கொரி 12:2. நமது சொந்த ஸ்தலமாகவே இருக்கும். ஸ்தேவானை இயேசு கிறிஸ்து எழுந்து வரவேற்றார். அப் 7:55.
- பிதாவின் வீட்டில்

1) வரவேற்பு

2) வெகுமதி

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

**பரலோகத்தில் அளிக்கப்படும் பரிசுப் பொருட்களின் அளவு வேறுபடும்**

3) புதிய எருசேலம் (பரம எருசலேம்)

இயேசு கிறிஸ்து ஆயிரம் வருட அரசாட்சிக்குப் பின் நியாய தீர்ப்பை முடித்ததும் தம் மணவாட்டி சபைக்காக சிறப்பாக கட்டி வைத்திருந்த இடம் வெளி 21:2

- பரிசுத்தவான்களின் வாஞ்சை (ஆபிரகாம்) எபி 11:10,11,14 தேவனே அஸ்திபாரமிட்டு கட்டுகிறார்.
- தேவன் கட்டும் நகரம் எபி 11:10,16
- நிலையான நகரம் எபி 13:14, 12:28
- கிறிஸ்துவின் நகரம் யோவா 14:3, எபே 1:21,23, எபி 11:14
- அன்பின் நகரம்

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

www.ratchipu.com